# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் - 2025

***Frequently Asked Questions (FAQ)***

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

<table>
<tr><th>வ. எண்</th><th>பிரிவு</th><th>வயது வரம்பு</th><th>பதிவேற்றம் செய்ய வேண்டிய சான்றிதழ்</th></tr>
<tr><td>1.</td><td>பள்ளி பிரிவு<br>(Under 19)</td><td>01.01.2007 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு பயில்பவராக இருத்தல் வேண்டும்.</td><td rowspan="5">அரசால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அடையாள அட்டை<br><br>(போட்டிகள் நடைபெறும் போது கீழ்காணும் விவரக்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும்)</td></tr>
<tr><td>2.</td><td>கல்லூரி பிரிவு<br>(Under 25)</td><td>01.07.2000 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்</td></tr>
<tr><td>3.</td><td>மாற்றுத்திறனாளிகள் பிரிவு</td><td>வயது வரம்பு இல்லை</td></tr>
<tr><td>4.</td><td>அரசு ஊழியர்கள் பிரிவு</td><td>வயது வரம்பு இல்லை</td></tr>
<tr><td>5.</td><td>பொதுப்பிரிவு<br>(15 வயது முதல் 35 வயது வரை)</td><td>(35 வயது எனில் 01.01.1990 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவராகவும் 15 வயது எனில் 01.01.2010 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவராகவும் இருத்தல் வேண்டும்)</td></tr>
</table>

···· ஒவ்வொரு பிரிவிற்கான விரிவான விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. போட்டிகளுக்கு பதிவு செய்வதற்கு முன்னர் விளக்கங்களை தெளிவாக தெரிந்து கொள்ளவும் ····

## பொதுவான தகவல்

- *17.07.2025* **முதல்** *www.cmtrophy.sdat.in* **என்ற இணையதளம் வாயிலாக** தமிழ்நாடு **முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கான இணையதள விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. போட்டிகள் நடைபெறும் நாள் மற்றும் இடம் குறித்த விவரங்கள்** *www.cmtrophy.sdat.in* **இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். விவரங்களுக்கு தொடர்ந்து** *www.cmtrophy.sdat.in* **இணையதளத்தை பார்வையிடவும்.**
- தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்காக **இணையதளம் வாயிலாக விண்ணப்பித்திட ஆதார் எண் உள்ளீடு செய்திடும் போது ஒருவர் வேறு வேறு ஆதார் எண்கள் மூலமாகவோ அல்லது ஆதார் எண்ணினை தவறாகவோ குறிப்பிட்டு விண்ணப்பித்திருப்பின் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு போட்டிகளில் பங்கேற்றிட அனுமதி மறுக்கப்படும்**
- **ஒவ்வொரு பிரிவு விளையாட்டு வீரர்களும், போட்டிகள் நடைபெறும் போது கீழ்கண்ட உரிய ஆவணங்களை அவசியம் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
    - **பள்ளி / கல்லூரி பிரிவுகள் - பள்ளி/கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட** ***Bonafide Certificate / ID Card*** **மற்றும் ஆதார் கார்டு.**
    - **மாற்றுத்திறனாளிகள் பிரிவு - மாற்றுத்திறனாளிகளுக்கான சான்று** ***(issued by Differently abled Dept.)*** **மற்றும் ஆதார் கார்டு**

- அரசு ஊழியர்கள் பிரிவு – பணிபுரியும் அலுவலக அடையாள அட்டை மற்றும் அலுவலக அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட பணிபுரிவதற்கான உறுதி சான்றிதழ் மற்றும் ஆதார் கார்டு.
- பொதுப்பிரிவில் பங்கேற்கும் வெளிமாநிலத்தவர்கள் -தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வசித்திருப்பின் குடும்ப அட்டை *(Ration Card)* / இருப்பிடச் சான்றிதழ் *(Nativity Certificate)* மற்றும் ஆதார் கார்டு.

## பொதுவான கேள்விகள்

1. **ஒரு விளையாட்டு வீரர் எத்தனை விளையாட்டுக்களில் பங்கேற்க முடியும்?**

   அனைத்துப் பிரிவு வீரர்களும் ஒரே ஒரு விளையாட்டில் மட்டுமே பங்கேற்க முடியும். பள்ளி மற்றும் கல்லூரி பிரிவு விளையாட்டு வீரர்கள் தடகளம் *(Athletics)* மற்றும் நீச்சல் *(Swimming)* விளையாட்டுப் பிரிவுகளில், மட்டும் ஏதேனும் இரண்டு பிரிவுகளில் *(events)* பங்கேற்கலாம்.

2. **இறகுப்பந்து / கேரம் / டென்னிஸ் / டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஒரு விளையாட்டு வீரர் எத்தனை பிரிவுகளில் பங்கேற்கலாம்?**

   *Singles and Doubles* இரண்டு பிரிவிலும் பங்கேற்கலாம்.

3. **குழு விளையாட்டுக்களில் பங்குபெற எவ்வாறு பதிவு செய்திட வேண்டும்?**

   குழு விளையாட்டுகளில் பங்கேற்க, ஒரு வீரர் *(Captain) Player registration* எனும் *Option* மூலம் உள்நுழைந்து தனது சுயவிவரங்களை குறிப்பிட வேண்டும். குழு விளையாட்டினை தேர்வு செய்து தனது ஆதார் கார்டு விவரங்கள் உட்பட அனைத்து

**விவரங்களையும் உள்ளீடு செய்த பின்** தனது **குழுவில்** பங்கேற்க **உள்ள அனைத்து வீரர்களின் விவரங்களை மொத்தமாக உள்ளீடு செய்**து பதிவினை சமர்ப்பிக்க **வேண்டும்**. ஒரு குழுவில் பதிவு செய்துள்ள வீ**ரர்**கள் எக்காரணம் கொண்டும் வேறு எந்த குழுவிலும் பதிவு செய்திட கூடாது. அவ்வாறு பதிவு செய்திடும் பட்சத்தில் இரண்டு குழுவும் நிராகரிக்கப்படும்.

4. **இணையதளம் வாயிலாக போட்டிகளுக்கு பதிவு செய்திடாமல், போட்டிகள் நடைபெறும் இடங்களுக்கு நேரடியாக வந்து போட்டியில் கலந்து கொள்ள வருபவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா?**

   **கண்டிப்பாக அனுமதி கிடையாது. இணையதளம் வாயிலாக மட்டுமே பதிவு செய்திட வேண்டும்.**

5. **இணையதளம் வாயிலாக போட்டிகளுக்கு பதிவு செய்துள்ளவர்கள் போட்டியில் கலந்து கொள்ள இயலவில்லை எனில், அவருக்கு பதில் வேறு வீரர்கள் போட்டி நடைபெறும் போது கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்களா?**

   **கண்டிப்பாக அனுமதி கிடையாது. இணையதளம் வாயிலாக மட்டுமே பதிவு செய்திட வேண்டும்.**

## பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான கேள்விகள்

6. **பள்ளி மாணவ மாணவியர்களுக்கான வயது வரம்பு ஏதேனும் உள்ளதா?**

   **ஆம்.** *01.01.2007* **அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும்** *6* **ஆம் வகுப்பு முதல்** *12* **ஆம் வகுப்பு பயில்பவராக இருத்தல் வேண்டும்.**

7. **கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான வயது வரம்பு ஏதேனும் உள்ளதா?**

ஆம். *01.07.2000* அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

8. **பள்ளி பிரிவில் *CBSE / ICSE* பள்ளி மாணவ மாணவியர்கள் பங்கேற்கலாமா?**

பங்கேற்கலாம்

9. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் தாங்கள் கல்வி பயிலும் மாவட்டம் விடுத்து மற்ற மாவட்டம் சார்பாக பங்கேற்க இயலுமா?**

இயலாது. பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் தாங்கள் கல்வி பயிலும் மாவட்டத்தின் சார்பாக மட்டுமே கலந்து கொள்ள இயலும், வேறு மாவட்டம் சார்பாக கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது

10. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் போட்டிகளுக்கு இணையதளத்தில் விண்ணப்பிக்கும் போது சான்றிதழ்கள் ஏதும் பதிவேற்றம் செய்திட வேண்டுமா?**

புகைப்படம் மட்டும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

(மேலும், பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் போட்டிகள் நடைபெறும் போது தாங்கள் பயிலும் பள்ளி – கல்லூரி முதல்வர் / தலைமையாசிரியரிடமிருந்து (பெயர், பிறந்த தேதி மற்றும் வகுப்பு உள்ளிட்ட விவரங்களுடன் *Bonafide Certificate* பெற்று) *Bonafide Certificate / ID Card* சமர்ப்பிக்க வேண்டும்)

11. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் குழுவாக எத்தனை அணிகள் வரை பதிவு செய்யலாம்?**

ஒரு குழு விளையாட்டில் ஒரே பள்ளியை சார்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட அணிகள் பதிவு செய்திடலாம். குழுவிளையாட்டில் இடம் பெறும் மாணவ / மாணவியர்கள் ஒரே பள்ளியில் / கல்லூரியில் படிப்பவர்களாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

12. பள்ளி / கல்லூரி பிரிவில் கபாடி விளையாட்டில் கலந்து கொள்வதற்கு எடைப்பிரிவு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

ஆம். பள்ளி மாணவர்களுக்கு *Under-75*கி, பள்ளி மாணவிகளுக்கு *Under- 65*கி எடைப்பிரிவும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு *Under-85*கி, கல்லூரி மாணவிகளுக்கு *Under=75*கி எடைப்பிரிவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

13. **பள்ளி / கல்லூரி படிப்பினை முடித்த மாணவ மாணவியர்கள் பள்ளி / கல்லூரி பிரிவில் பங்கேற்க இயலுமா?**

**இயலாது. நடப்பாண்டில், அதாவது 2025-2026 ஆம் ஆண்டில் பள்ளி / கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் மட்டுமே பள்ளி கல்லூரி பிரிவில் பங்கு பெற இயலும்.**

14. **வேறு மாநிலங்களை சார்ந்த மாணவ மாணவியர்கள் போட்டிகளில் பங்கேற்க இயலுமா?**

**வேறு மாநிலங்களை சார்ந்த மாணவ மாணவியர்கள் தமிழ்நாட்டில் பள்ளி / கல்லூரியில் தற்போது கல்வி பயின்று வருபவராக இருப்பின் தாங்கள் பயிலும் பள்ளி / கல்லூரியில் இருந்து** *Bonafide certificate / Original ID card* **பெற்று போட்டிகள் நடைபெறும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.**

15. **தொழில்நுட்பக் கல்வி** *(ITI) /* **பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் கல்லூரி பிரிவில் பங்கு பெற இயலுமா?**

**கல்லூரி பிரிவில் பங்குபெறலாம்.**

16. **பள்ளி / கல்லூரி பிரிவில் குழு விளையாட்டுக்களில் கையுந்து பந்து** *(Volleyball) /* **கடற்கரை கையுந்து பந்து** *(Beach Volleyball)* **விளையாட்டுக்களில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் இரண்டு பிரிவுகளிலும் கலந்து கொள்ள இயலுமா?**

**இயலாது. ஏதேனும் ஒரு விளையாட்டில் மட்டுமே கலந்து கொள்ள**

**இயலும்.**

17. **கடந்த கல்வி ஆண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று, நடப்பாண்டில் பொறியியல் மற்றும் முதலாம் ஆண்டு கல்வி பயில வேண்டிய மாணவர்களில், ஒரு சிலருக்கு கல்லூரி வகுப்புகள் நாளது தேதி வரை ஆரம்பிக்கப்படாத நிலையில் அவர்கள் எந்த பிரிவில் / எந்த மாவட்டத்தின் சார்பாக பதிவு செய்திட வேண்டும்?**

நடப்பாண்டிற்கான பொறியியல் சேர்க்கைக்கான கலந்தாய்வும், கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கையும் நிறைவடைந்து விட்டதாலும், மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ள கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் அவர்களிடமிருந்து *Bonafide Certificate* பெற்று போட்டிகள் நடைபெறும் போது உண்மை நகல் சமர்ப்பித்தல் வேண்டும்.

18. **தொலைதூரக் கல்வி பயிலும் கல்லூரி / திறந்த வெளி பள்ளிக் கல்வி *(Open Schooling )* பயிலும் மாணவ / மாணவியர்கள் இப்போட்டிகளில் பங்குபெற இயலுமா?**

பங்கேற்க இயலாது.

19. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான ரோடு சைக்கிளிங் விளையாட்டுப் போட்டிகள் குறித்த விவரங்கள் என்ன?**

சென்ற ஆண்டு (2024) பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான ட்ராக் சைக்கிளிங் போட்டிகள் மாநில அளவில் மட்டும் நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் (2025) மண்டல மற்றும் மாநில அளவிலான ரோடு சைக்கிளிங் போட்டிகள் பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்கள் பிரிவில் மட்டும் நடத்தப்படுகிறது.

20. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான ரோடு சைக்கிளிங் விளையாட்டுப் போட்டிகளின் தூரம் குறித்த விவரங்கள் என்ன?**

மண்டல மற்றும் மாநில அளவிலான ரோடு சைக்கிளிங் போட்டியில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 10 கி.மீ தொலைதூரப் போட்டியாகவும், கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு 20 கி.மீ தொலைதூரப் போட்டியாகவும் நடத்தப்படுகிறது.

21. **ரோடு சைக்கிளிங் போட்டிகளில் பயன்படுத்தப்படவேண்டிய சைக்கிள் குறித்த விவரம் என்ன?**

அனைத்து வகையான சைக்கிள்களும் பயன்படுத்திடலாம்.

22. **பள்ளி / கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான ரோடு சைக்கிளிங் போட்டிகளுக்காக சைக்கிள் கொண்டு வருவது குறித்த விவரம் என்ன?**

போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் சொந்தமாக சைக்கிள் கொண்டு வரவேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக சைக்கிள் வழங்கப்படமாட்டாது.

## மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பிரிவிற்கான கேள்விகள்

23. **மாற்றுத்திறனாளி விளையாட்டுப் பிரிவில் பிரிவு வாரியாக வழங்கப்பட்டுள்ள விளையாட்டுக்கள் தவிர மற்ற பிரிவுகளில் / மற்ற விளையாட்டுக்களில் பங்கேற்க இயலுமா?**

இயலாது. பிரிவு வாரியாக வழங்கப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமே பங்கேற்க இயலும்.

24. **அரசுத்துறைகளில் பணியாற்றும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் எந்த பிரிவின் கீழ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க இயலும்?**

அரசுத் துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் தங்கள் விருப்பப்படி, மாற்றுத்திறனாளிகள் பிரிவு அல்லது அரசு ஊழியர்கள் பிரிவு என எப்பிரிவில் வேண்டுமானாலும் ஏதேனும் ஒரு விளையாட்டில் ஒரு பிரிவில் மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆனால், மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழைக்

கொண்டு அரசு ஊழியர்கள் பிரிவில் எவ்வித சலுகைகளும் பெற இயலாது.

25. **மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கேற்பதற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள் என்ன?**

இப்பிரிவில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் ஆதார் அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றினை *(issued by Differently abled Dept)* போட்டியின் போது சமர்ப்பித்திடல் வேண்டும்.

26. **மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் சொந்த மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்க வேண்டுமா? கல்வி பயிலும் / வேறு மாவட்டத்தில் வசித்திட நேர்ந்தால், கல்வி பயிலும் / பணிபுரியும் மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கலாமா?**

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள், தாங்கள் பணிபுரியும் மாவட்டத்திலோ அல்லது சொந்த மாவட்டத்திலோ எங்கு வேண்டுமானாலும் போட்டிகளில் பங்குபெறலாம். ஆனால் தாங்கள் பங்குபெறும் மாவட்டம் சார்ந்த உரிய ஆவணங்களை (கல்வி பயிலும் மாணவமாணவியர் எனில் பள்ளி / கல்லூரியில் முதல்வரிடம் இருந்து பெறப்பட்ட *Bonafide certificate*-ம், பணிபுரிபவர் எனில் அலுவலகத்தின் *ID card* உண்மை நகலினை போட்டிகள் நடைபெறும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

27. **மாற்றுத்திறனாளிகள் பிரிவில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் ஒருவர் எத்தனை போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்?**

இப்பிரிவில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள், தங்களுக்கான பிரிவில் தனி நபர் மற்றும் குழுவிளையாட்டுக்களில் கலந்து கொள்ளலாம்.

## பொதுப்பிரிவு விளையாட்டு வீரர்களுக்கான கேள்விகள்

28. **பொதுப்பிரிவில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் சொந்த மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கலாமா? அல்லது பணிபுரியும் மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கலாமா?**

    பொதுப்பிரிவில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள் ஆதார் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் *(Nativity Certificate)* பெறப்பட்டுள்ள மாவட்டம் சார்பாக மட்டுமே பங்கு பெற இயலும். மேலும், ஒரு மாவட்டம் சார்பாக மட்டுமே பங்கு பெற இயலும். 2 ஆதார் அட்டை மூலம் பதிவு செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

29. **மற்ற மாநிலங்களை சார்ந்த விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் வசித்து வருபர்களாக இருப்பின் பொதுப் பிரிவில் போட்டிகளில் பங்கேற்க இயலுமா?**

    மற்ற மாநிலங்களை சார்ந்தவர்கள் தமிழ்நாட்டில் வசிப்பவர்களாக இருப்பின், பொதுப்பிரிவில் பங்கு பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் இருப்பிடச் சான்றிதழ் போட்டி நடைபெறும் போது சமர்ப்பித்தல் வேண்டும் (தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வசித்தவராக இருப்பின் அதற்கான இருப்பிடச் சான்றிதழ் *(Nativity Certificate)* பெற்றிட வேண்டும்)

## அரசு ஊழியர் பிரிவு விளையாட்டு வீரர்களுக்கான கேள்விகள்

30. **அரசு ஊழியர்கள் பிரிவில் விளையாட்டு வீரர்கள் சொந்த மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கலாமா? அல்லது பணிபுரியும் மாவட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கலாமா?**

    அரசு ஊழியர்கள் பிரிவில் விளையாட்டு வீரர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டம் சார்பாக மட்டுமே பங்கு பெற இயலும்,

போட்டிகள் நடைபெறும் போது அலுவலக அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

31. **CBSE / ICSE பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள், பணியாளர்கள், அரசு ஊழியர் பிரிவில் போட்டிகளில் கலந்து கொள்ள இயலுமா?**

பங்கேற்க இயலாது, பொதுப்பிரிவில் மட்டுமே கலந்து கொள்ளமுடியும்.

32. **அரசு ஊழியர்கள் பிரிவில் சீருடைப் பணியாளர்கள் பங்கேற்கலாமா?**

பங்கேற்கலாம்.

33. **அரசு ஊழியர்கள் பிரிவில் மத்திய அரசில் பணிபுரிபவர்கள் பங்கேற்கலாமா?**

பங்கேற்க இயலாது, மத்திய அரசில் பணிபுரியும் ஊழியர்கள் பொதுப்பிரிவில்

மட்டுமே கலந்து கொள்ளமுடியும்.

34. **அரசு ஊழியர்கள் பிரிவில் ஒரே துறையில் பணிபுரிபவர்கள் குழுவாக பதிவு செய்திட வேண்டுமா? மற்ற துறைகளில் பணிபுரிபவர்கள் குழுவாக பதிவு செய்திட இயலுமா?**

அரசு ஊழியர்கள் பணிபுரியும் மாவட்டத்தில் ஒரே துறையில் பணிபுரிபவர்களும், மற்ற துறையில் பணிபுரிபவர்களும் இணைந்து ஒரே குழுவாக பதிவு செய்திடலாம். ஆனால், வீரர்கள் ஒரே மாவட்டத்தில் பணிபுரிபவர்களாக இருத்தல் வேண்டும்.

35. **அரசு ஊழியர்கள் பிரிவில், அரசு நிதி பெறும் பள்ளிகளில் பணிபுரியும்**

**ஆசிரியர்கள் / நிரந்தர ஊழியர்கள் பங்கு பெறலாமா?**

பங்கு பெறலாம். அரசு ஊழியர்கள் பிரிவில் தமிழ்நாடு அரசு நிதி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / நிரந்தர ஊழியர்கள் பங்கு பெறலாம்.

*36.* **அரசு ஊழியர்கள் பிரிவில் பணிபுரியும் மாவட்டம் வேறு இடமாக இருந்து, தற்போது பணிநிமித்தமாக அயற்பணியில் *(Deputation)* வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருபவர்கள் எந்த மாவட்டம் சார்பாக போட்டியில் பங்கேற்க வேண்டும்?**

அரசு ஊழியர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டம் சார்பாக மட்டுமே பதிவு செய்து போட்டியில் பங்கேற்க வேண்டும். அயற்பணியில் *(Deputation)* பணிபுரியும் மாவட்டம் சார்பாக பங்கேற்றிட அனுமதிக்க இயலாது.